DEPOSITION OF WITNESS

(Chapter XXV Code of BNSS 2023)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE,

ELUMATHUR VILLAGE IN MODAKURICHI TALUK

CC.No.45/2024

Deposition of Witness of PW14

Name	: ராஜகண்ணன்	Caste	:
Father's Name	:	Calling	:
Village	:	Religion	:
Taluk	:	Age	:

Solemnly affirmed in acordance with the provisions of Act X of 1873 of the day of 17th March 2026.

எதிரி ஆஜரில் உள்ளார்.

சாட்சி சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறார்.

<u>முதல் விசாரணை:</u>

நான் தற்போது அரச்சலூர் காவல்நிலையம் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரி காவல் ஆய்வாளர் தங்கவேல் ஆவார். அவர் தற்போது பணியில் இருந்து ஓய்வு பெற்று திருச்சியில் வசித்து வருகிறார், அவருக்கு தற்போது உடல்நிலை சரியில்லாமல் தொடர் மருத்துவ சிகிச்சையில் இருப்பதாலும், நீதிமன்றத்தில் நேரில் முன்னிலையாகி சாட்சியம் அளிக்கக்கூடிய உடல்நலம் இல்லாததாலும் மேற்படி வழக்கில் ஆவணங்களின் அடிப்படையில் மேற்படி தங்கவேல் அவர்களின் மருத்துவ சான்றின் அடிப்படையில் நீதிமன்றத்தின் அனுமதியுடன் ஆவணங்களின் அடிப்படையில் நான் சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 16.12.2018 தேதி மாலை 16.40 மணிக்கு அரச்சலூர் காவல் நிலைய பணியில் உதவி ஆய்வாளர் கிருஷ்ணராஜ் என்பவர் நிலைய அலுவலில் இருந்தபோது பாலசுப்பிரமணியம் என்பவரிடம் அவரது பள்ளியில் பணிபுரியும் பாதிக்கப்பட்ட சம்பந்தப்பட்ட பணியாளர்கள் அளித்த புகார்களுடன் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்துமூலமான புகாரை பெற்று நிலைய குற்ற எண்.336/2018 சட்ட பிரிவுகள் 409, 420 இதச ன் கீழான வழக்கு பதிவு செய்து புலன் விசாரணைக்காக காவல் ஆய்வாளர் தங்கவேல் அவர்களின் வசம் வழக்கு கோப்பினை புலன் விசாரணைக்கு ஒப்படைத்துள்ளார்.

2. மேற்படி காவல் ஆய்வாளர் தங்கவேல் அவர்கள் 17.12.2018 ம் தேதி காலை 10.30 மணிக்கு இந்த வழக்கை புலன் விசாரணைக்கு எடுத்து கொண்டு சம்பவ இடம் சென்று சாட்சிகள் பழனிசாமி, லோகேஸ்வரன் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர், மாதிரிவரைபடம் தயார் செய்துள்ளார். **பார்வை மகஜர் அ.சா.ஆ.15 ஆகவும், மாதிரி வரைபடம் அ.சா.ஆ.16 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்பு சாட்சிகள் பாலசுப்பிரமணியன், வசந்தி, கார்த்திகேயன்,

சதீஸ்குமார், செல்வராஜ், சத்தியா, அர்ச்சுணன், பெரியசாமி, விஜயராணி, துரைசாமி, கந்தசாமி, தங்கவேல், சரவணபாரதி, சக்திகந்தன், பழனிசாமி, லோகேஸ்வரன் ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து S.N. பாலசுப்பிரமணியன் என்பவரிடம் கொடுத்த புகார் சம்பந்தமாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார்.

3. பின்பு, சம்பவ இட விசாரணையில் இருந்தும், சாட்சிகளின் வாக்குமூலத்தில் இருந்தும் கஸ்துாரிபா கிராம உயர்நிலை பள்ளியானது அறக்கட்டளை நிர்வாகம் மூலம் அரசு உதவி பெற்று நடந்து வரும் பள்ளி என்றும், அதில் தற்காலிகமாக பணிபுரியும் தகுதிவாய்ந்த ஆசிரியர்கள் அறக்கட்டளை விதிமுறைகளுக்கு உட்பட்டு தேர்வு செய்து நியமன உத்தரவு வழங்கி மாவட்ட கல்வி அலுவலருக்கு அனுப்பி அவரின் ஒப்புதல் பெற்று தமிழக அரசால் மாதாந்திர ஊதியம் வழங்கப்படுவதாகவும், அதில் தலைமை ஆசிரியராக எதிரி பெரியசாமி ஒரு பொது ஊழியராக பணிபுரிந்து தலைமை ஆசிரியர் என்ற பொறுப்பை தவறாக பயன்படுத்தி 10.01.2014 முதல் 16.12.2015 வரையிலான காலத்தில் தற்காலிக ஆசிரியராக பணியாற்றி வந்த வசந்தி, கார்த்திகேயன், சதீஸ்குமார், செல்வராஜ்,சத்தியா, அர்ச்சுணன், பெரியசாமி, விஜயராணி, துரைசாமி ஆகியோர்களுக்கு அவர்களது தகுதிக்கேற்ப அந்த பணியில் பணி நிரந்தரம் செய்த கொடுப்பதாகவும், மேற்படி பணத்தை அறக்கட்டளை நிர்வாகத்திற்கு கொடுக்கவேண்டும் என்று சொல்லி அவர்களை நம்ப வைத்து அவர்களிடம் பல்வேறு தவணைகளில் பணம் வாங்கிக் கொண்டு எதிரி பெரியசாமி நம்பிக்கை மோசடி செய்து ரூ.35,19,000/–த்தை தனது சுயலாபம் கருதி வாங்கி ஏமாற்றியுள்ளது புலன் விசாரணையில் தெரியவந்ததால் அவரை காவல் ஆய்வாளர் தேட எதிரி பெரியசாமி சென்னை உயர்நீதிமன்றத்தில் முன்ஜாமீன் பெற்ற விபரம் தெரிய வந்ததுள்ளது. எனவே காவல் ஆய்வாளர் தங்கவேலு தனது புலன் விசாரணை முடித்து எதிரி பெரியசாமி 409,420 இதச–ன் படி மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

எதிரிதரப்பு குறுக்கு விசாரணை

வா.சா.ஆ.1 ஆவணமான முதல் தகவல் அறிக்கையில் சம்பவம் 10.01.2014 லிருந்து 16.11.2018 வரை நடந்த சம்பவம் பற்றி புகார் பெறப்பட்ட தேதி 16.12.2018 என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.10 ஆவணமான புகாரில் யார் யார் எந்தெந்த தேதியில் புகார் கொடுத்தார்கள் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான், ஆனால் எந்த தேதியில் கொடுத்த விபரம் இணைப்பாக கொடுக்கப்பட்டுள்ளது. வா.சா.ஆ.10 புகாரில் எந்த இணைப்பும் இணைக்கப்படவில்லை என்றால் சரியல்ல, இணைக்கப்பட்டுள்ளது ஆனால் இணைப்பு என்ற வாசகம் புகாரில் காணப்படவில்லை.வா.சா.ஆ.10 ஆவணமான S.N.பாலசுப்பிரமணியம் கொடுத்த புகாரில் தேதியும், கையொப்பம் இல்லை என்றால் பச்சை மையால் கையொப்பம் உள்ளது. தேதி இல்லை என்றால் புகாரில் உள்ளது. வா.சா.ஆ.10 புகாரில் பாலசுப்பிரமணியம் அவராக கையொப்பம் செய்யவில்லை என்றால் சரியல்ல.

2. புலன் விசாரணை அதிகாரி புலன்விசாரணை செய்யப்பட்டதின் அடிப்படையில் புகார் செய்யப்பட்டதாக சொல்லப்படும் நபர்களிடம் இருந்து அவர்கள்

தங்களிடம் பணம் இருந்ததற்கான ஆவணம் எதுவும் கேட்டு பெறவில்லை என்றால் ஆவணம் எதுவும் பெறவில்லை, ஆனால் விசாரணையின் போது வாக்குமூலம் அளித்துள்ளார்கள். பொதுவாக புலன்விசாரணை அதிகாரி அவ்வழக்க சம்பந்தப்பட்ட ஆவணங்களை பெற்று நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவேண்டும் என்றால் சரிதான், ஆனால் இந்த வழக்கில் மேற்படியான ஆவணங்கள் எதுவும் இல்லாமலேயே வழக்கு சம்பவமானது நடைபெற்றுள்ளது. அதேபோல S.N. பாலசுப்பிரமணியத்திடம் புகார் கொடுத்ததாக சொல்லப்படும் நபர்கள் நேரடியாக காவல் ஆய்வாளரிடம் புகார் கொடுக்கவில்லை என்றால் தனிப்பட்ட முறையில் யாரும் நேரடியாக கொடுக்கவில்லை, ஆனால் S.N. பாலசுப்பிரமணியம் கொடுத்த புகாரிலேயே ஒவ்வொருவரின் தனித்தனி புகாரும் இணைத்துள்ளார்.

3. மேலும் சாட்சிகள் தங்களது சாட்சியத்தில் கந்தசாமிபாளையத்தில் உள்ள சூர்யா பேக்கரியில் வைத்து சில சாட்சிகளிடம் எதிரி பணம் வாங்கியதாக குறிப்பிட்டுள்ள நிலையில் சூர்யா பேக்கரி உரிமையாளரையோ அல்லது அங்கு பணிபுரியும் நபர்களையோ இந்த வழக்கில் விசாரித்து அவர்களின் சாட்சியம் பதிவு செய்யப்படவில்லை என்றால் மேற்படி வழக்கில் பொருத்த வகையில் பொதுமக்கள் அதிகமாக வந்துபோகும் சூழ்நிலையில்தனிப்பட்ட இருநபர்களுக்கு இடையே பரிமாற்றம் குறித்து பேக்கரி உரிமையாளரும், பணியாளர்களும் அறிந்திருக்க வாய்ப்பில்லை என்பதால் விசாரணை அதிகாரி விசாரித்து இருக்க வாய்ப்பு குறைவு ஆகும். ஒரு சம்பவம் நடக்கும் போது அந்த சம்பவத்தை ஒட்டியுள்ள சம்பவஇட சாட்சிகளை விசாரிக்க வேண்டும் என்பது காவல் நிலைமுறை ஆணை என்றால் சரிதான். இந்த வழக்கில் சம்பவ இட சாட்சிகளை விசாரித்தாக வழக்கில் விசாரணை அதிகாரி வழக்கு கோப்பில் குறிப்பிடவில்லை என்றால் மேற்படி சம்பவ இடமாக குறிப்பிடப்பட்டுள்ளது பொதுமக்கள் வந்துபோகும் இடம் என்பதால் தனிப்பட்ட வகையில் சம்பவ இடமாக கருதி விசாரிக்கவில்லை என்பது தெரியவருகிறது.

4. S.N.பாலசுப்பிரமணியம் காவல்நிலையத்தில் புகார் கொடுத்ததின் அடிப்படையில் S.N.பாலசுப்பிரமணியத்தை எந்த தேதியில் யாரிடம், எங்கு வைத்து புலன் விசாரணை அதிகாரி விசாரித்தார் என்ற விபரத்தை வழக்கு கோப்பில் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. பொதுவாக ஒரு நபர் ஒருவருக்கு பணம் கொடுக்கும்போது உண்மையில் தன்னிடம் பெற்ற பணத்தை கொடுத்தாரா இல்லையா என்பது குறித்து விசாரிப்பது வழக்கம் என்றால் சரிதான். S.N. பாலசுப்பிரமணியம் கொடுத்த புகாரின் அடிப்படையில் எதிரியிடம் சாட்சிகள் பணம் கொடுத்ததாக சொல்லப்படும் பணம் எதிரியின் வங்கி கணக்கில் வந்துள்ளதா அல்லது எந்த வகையில் எதிரியல் பெறப்பட்டது போன்ற விபரத்தை தனது புலன் விசாரணையின் அடிப்படையில் எவ்வாறு தெரியவந்தது என்ற விபத்தை புலன் விசாரணை இறுதி அறிக்கையில் குறிப்பிடவில்லை என்றால் குறிப்பிடவில்லை.

5. எதிரி மேற்படி தொகைகளை வாங்கி தனது சொந்த செலவுக்கு பயன்படுத்தியுள்ளார் என்பதற்கும், அவருடைய வங்கிகணக்கில் வைத்துள்ளார்

என்பதையோ அல்லது ஏதாவது அசையும், அசையா சொத்துக்கள் வாங்கியுள்ளதாகவோ கண்டு அதை கைப்பற்றியோ அல்லது அதுகுறித்து விசாரித்தோ ஆவணம் எதுவும் வாய்மொழி சாட்சியோ இந்த வழக்கில் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரியல்ல, அ.சா.ஆ.8,9 ஆவணங்களில் சாட்சி சத்தியா எதிரி குறிப்பிடதின் பேரில் 21.07.2015ம் தேதி ரூ.50,000மும், 10.08.2015 ம் தேதி ரூ.1லட்சமும் ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா வங்கி மூலமாக அறக்கட்டளை வங்கிகணக்கிற்கு அனுப்பியுள்ள ஆவணம் உள்ளது. அறக்கட்டளை கணக்கானது எதிரியின் தனிப்பட்ட நிர்வாகத்திலோ, எதிரியின் தலைமையின் கீழே இல்லை என்றால் சரிதான். அறக்கட்டளைக்கும், தலைமை ஆசிரியருக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. அறக்கட்டளைக்கு செலுத்தப்பட்டதாக சொன்னால் அது அறக்கட்டளை தலைவர் மற்றும் செயலாளருக்கு தான் போய் சேருமே தவிர தலைமை ஆசிரியரான எதிரிக்கு அது சம்பந்தமில்லை என்றால் சரியல்ல.

6. பள்ளியின் தலைமை ஆசிரியருக்கும், அறக்கட்டளையின் நிர்வாக நடவடிக்கைகளில் எவ்வித பங்கும், நேரடி தொடர்பும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. புலன்விசாரணை அதிகாரி எதிரியின் வங்கிகணக்கு பட்டியலை வழக்கு கோப்பில் இணைக்கப்படவில்லை என்றால் சரிதான். ஏற்கனவே புலன்விசாரணை சரிவர புலன் விசாரணை செய்யாமல் ஆஜர் எதிரிமீது தவறாக இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. நன்கொடை என்பது ஒருவரிடம் கட்டாயப்படுத்தி பெறுவதா அல்லது விருப்பப்பட்டு கொடுப்பதா என்றால் விருப்பப்பட்டு கொடுப்பது, ஆனால் ஒவ்வொரு தனிநபரை பொருத்தும், சூழ்நிலையை பொருத்தும் மாறும். மேலும் இந்த வழக்கின் புலன்விசாரணை அதிகாரி பெற்ற புகாரில் உள்ள புகாரில் குறிப்பிட்டுள்ள சங்கதிகளுக்கும், அதே சாட்சிகள் முதல் விசாரணையில் குறிப்பிட்டுள்ள சாட்சிகளுக்கும் முன்னுக்கு பின் முரண்பாடு உள்ளதை பார்க்கும்பொழுது புலன்விசாரணை அதிகாரி உரிய வகையில் விசாரணை செய்யவில்லை என்றால் சரியல்ல.

7. S.N.பாலசுப்பிரமணியத்திற்கும், எதிரிக்கும் உள்ள தனிப்பட்ட கருத்துவேறுபாடு காரணமாக மேற்படி பாலசுப்பிரமணியம் பள்ளியில் பணிபுரியும் ஆசிரியர்களிடம் பொய்யான கடிதம் பெற்று பொய் புகார் கொடுத்து அதன் அடிப்படையில் சரிவர புலன் விசாரணை செய்யாமல் எதிரிமீது தவறாக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. ஏற்கனவே சரிவர புலன்விசாரணை செய்யாமல் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்களின் அடிப்படையில் நான் தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.